**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
-----
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.I, PERAMBALUR.**

| | | |
|---|---|---|
| Case Number | : | CC 32/2013 |
| Prosecution Witness | : | அ.சா.6 |
| Name | : | க.முருகேசன் |
| Father's/Husband Name: | : | கந்தசாமி |
| Address : | : | |
| Age | : | /2024 |

<u>தேதி: 13 /08/2024</u>

**முதல் விசாரணை :** <u>சாட்சிக்கு நீதிமன்ற உதவியாளர் திருமதி.S.ஜான்சிராணி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு, விசாரணைக்கு அனுமதிக்கப்பட்டது</u> **(எதிரிகள் ஆஜர் இல்லை).**

நான் தற்போது பதிவு துறையில் துணை பதிவு துறை தலைவராக பணிபுரிந்து ஓய்வு பெற்றுவிட்டேன். இந்த வழக்கின் சம்பவ காலத்தில் அரியலூர் மாவட்ட பதிவாளர் அலுவலகத்தில் மாவட்ட பதிவாளராக பணியிலிருந்தேன். 15.03.2010 அன்று மாவட்ட குற்றப்பிரிவு அலுவலகம் பெரம்பலூரில் இருந்து ஜான்சி என்பவருடைய விசாரணை நகலை கேட்டார்கள். அப்போது செட்டிக்குளம் சார்பதிவாளர் அலுவலகத்தில் சார்பதிவாளராக குணசீலன் என்பவர் பொறுப்பில் இருந்தார். குணசீலன் என்பவர் உதவியாளர் ஆவார். கூடுதல் பொறுப்பாக சார்பதிவாளர் பணியை செய்துவந்தார். அலுவலக உதவியாளராக பிச்சைமுத்து, பெஞ்சமீன் ஆகியோர் பணிபுரிந்தார்கள். கோமகன் என்பவர் தற்காலிக இளநிலை

உதவியாளராக பணிபுரிந்தார். பொதுவாக பத்திரம் பதிவுக்கு வரும்போது பட்டா புத்தகம், கணினி பட்டா, அடையாள அட்டை ஆகியவற்றை பரிசீலனை செய்து பதிவு செய்வது வழக்கம். ஆவணங்களை எழுதி கொடுத்ததற்கு விசாரணை மேற்கொள்ளப்பட்டு பதிவு பணி மேற்கொள்ளப்படும். விசாரணை சம்பந்தமாக கோப்புகளை மாவட்ட குற்றப்பிரிவு ஆய்வாளர் அவர்களிடம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

இல்லை.

எதிரி தரப்பு வழக்கறிஞர் முன்னிலையாகி மூத்த வழக்கறிஞர் வர இயலாததால் குறுக்கு விசாரணை ஒத்திவைக்க கோரினார்.

Taken down by / before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused/ pleader and admitted by the witness to be correct.

Sd/-

Judicial Magistrate No.I,
Perambalur.

JM1 PBLR